**கூடுதல் மாவட்ட நீதிமன்றம், திண்டுக்கல்**

முன்னிலை : **திரு. ப. சரவணன், பி.எல்.,**

கூடுதல் மாவட்ட நீதிபதி, திண்டுக்கல்

2023–ஆம் ஆண்டு மார்ச் திங்கள் 04–ஆம் நாள் சனிக் கிழமை

**அசல் வழக்கு எண்.20/2020**

**CNR. No. TNDG01–000626–2020**

திண்டுக்கல் மாவட்டம், திண்டுக்கல் மேற்கு வட்டம், ரெட்டியார்சத்திரம் வழி, காமாட்சிபுரம் அஞ்சல், காமாட்சிபுரத்தில் இருக்கும், சுமார் 50 வயதுள்ள சுப்பையா மகன் பழனிவேல்

... வாதி

/எதிர்/

1. திண்டுக்கல் மாவட்டம், திண்டுக்கல் மேற்கு வட்டம், கோனூர் அஞ்சல், கோனூர் மேற்கு தெருவில் இருக்கும், சுமார் 38 வயதுள்ள சின்னத்தம்பி மகன் முருகன்
2. திண்டுக்கல் மாவட்டம், திண்டுக்கல் மேற்கு வட்டம், கோனூர் அஞ்சல், கோனூர் மேற்கு தெருவில் இருக்கும், சுமார் 36 வயதுள்ள சின்னத்தம்பி மகன் ராஜேந்திரன்

... பிரதிவாதிகள்

வாதிக்கு, பிரதிவாதிகள் பிராது தொகை ரூ.20,30,250/–ஐயும், அசல் தொகை ரூ.15,00,000/–க்கு பிராது தேதி முதல் தொகை வசூலாகும்வரை 18% பின்வட்டி சேர்த்து செலுத்தி வைக்க வேண்டுமென கோரியும் மற்றும் செலவு தொகைக்கும் தாக்கல் செய்யப்பட்ட வழக்கு.

**மதிப்பு விபரம்**

| | | |
|---|---|---|
| தாவா புரோநோட்டு கடன் தொகை | – | ரூ.15,00,000.00 |
| அதற்கு 22.02.2018 முதல் 09.02.2020 வரை 23 மாதங்கள், 17 நாட்களுக்கு ரூ.100 க்கு ரூ.1.50 வீதம் வட்டி | – | ரூ. 5,30,250.00 |
| மொத்த கூடுதல் | | ரூ.20,30,250.00 |

அதற்கு தமிழ்நாடு நீதிமன்ற கட்டண சட்டம் பிரிவு 22ன் படி ரூ.60,908/- நீதிமன்ற கட்டணம் செலுத்தப்பட்டுள்ளது.

தாவா தாக்கல் செய்யப்பட்ட நாள்-10.02.2020

தாவா கோப்பில் எடுக்கப்பட்ட நாள்- 10.02.2020

வழக்குமூலம் எழுந்த நாள் -22.02.2018, 21.08.2019, 23.08.2019

## தீர்ப்பாணை

இவ்வழக்கானது 24.02.2023-ஆம் தேதியன்று இந்நீதிமன்றத்தின் முன் விசாரணைக்கு வந்தபோது, வாதி தரப்பில் கற்றறிந்த வழக்குரைஞர் திரு. T. முத்தமிழ்செல்வன் அவர்கள் ஆஜராகியும், 1-ஆம் பிரதிவாதி தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு. பி. சுரேஷ் பாஸ்கரன் அவர்கள் ஏற்கனவே ஆஜராகியும், வா.சா.1-ன் குறுக்கு விசாரணை சமயம் 1-ஆம் பிரதிவாதி நீதிமன்றத்தில் அழைத்து ஆஜராகாததால் தோன்றாத் தரப்பினராக்கப்பட்டும், 2-ஆம் பிரதிவாதி நீதிமன்றத்தில் அழைத்து ஆஜராகாததால் தோன்றாத் தரப்பினராக்கப்பட்டும், வாதி தரப்பு வாதம் கேட்கப்பட்டும், ஆவணங்கள் மற்றும் சாட்சியங்கள் பரிசீலிக்கப்பட்டும், இன்று வரை இந்நீதிமன்ற பரிசீலனையிலிருந்து வந்து, இன்று இந்நீதிமன்றம் வழங்கும்,

1) தாவா தொகை ரூ.20,30,250/-ஐயும், அசல் தொகை ரூ.15,00,000/-க்கு பிராது தேதி முதல் தீர்ப்பு தேதி வரை 9% பின்வட்டியுடனும், தீர்ப்பு தேதி முதல் தொகை வசூலாகும் வரை 6% பின்வட்டியுடனும் பிரதிவாதிகள், வாதிக்கு செலுத்த வேண்டுமென கட்டளையிடப்படுகிறது.

2) வழக்கின் செலவுத் தொகை ரூ.68,518/- ஐ வாதிக்கு, பிரதிவாதிகள் செலுத்த வேண்டுமென கட்டளையிடப்படுகிறது.

## <u>செலவு தொகை விவரம்</u>

| வ. எண். | செலவு தொகை விபரம் | வாதிக்கு ரூ. பை. |
|---|---|---|
| 1. | வழக்குரைக்கான வில்லை | 60,908.00 |
| 2. | வக்காலத்திற்கான வில்லை | 10.00 |
| 3. | கட்டளை சேர்ப்பிப்பதற்கு | 100.00 |
| 4. | வழக்கறிஞர் கட்டணம் சீனியர்<br>ஜுனியர் | 5000.00<br>2500.00 |
| | மொத்தம் | 68,518.00 |

2023–ஆம் ஆண்டு மார்ச் திங்கள் 04–ஆம் நாள் என்னால் கையொப்பமிடப்பட்டு, இந்நீதிமன்ற முத்திரையுடன் வழங்கப்பட்டது.

P SARAVANAN

Digitally signed by P SARAVANAN
Date: 2023.03.08 10:08:58 +0530

கூடுதல் மாவட்ட நீதிபதி,

திண்டுக்கல்.